Puducherry / Regional Bulletin / Tamil /18.10hrs / 05.05.2026 / Script

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : சரவணகுமார்

தேதி : 05.05.2026 – செவ்வாய்க்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

ஐக்கிய அரபு அமீரகத்தில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் 3 இந்தியர்கள் படுகாயம் அடைந்தது குறித்து பிரதமர் திரு. நரேந்திர மோடி, கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

5 மாநில சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற கட்சிகள் புதிய ஆட்சிய அமைப்பதற்கான நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன.

இந்தியாவிற்கும் – ஜமைக்காவிற்கும் இடையிலான நட்புறவில் வளர்ச்சிக்கான ஒத்துழைப்பு முக்கிய அம்சமாகத் திகழ்கிறது என்று, மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இந்தியா வந்துள்ள வியட்நாம் அதிபர் திரு. டோ லாம், புத்த கயாவில் உலகப் புகழ்பெற்ற மஹாபோதி கோவிலில் வழிபாடு செய்தார்.

ஐக்கிய அரபு அமீரகத்தின் ஃபுஜைரா பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் 3 இந்தியர்கள் படுகாயம் அடைந்தது குறித்து பிரதமர் திரு. நரேந்திர மோடி, கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். சமூக ஊடகப் பதிவு ஒன்றில் இது குறித்து தெரிவித்துள்ள பிரதமர், பொதுமக்களையும், உள்கட்டமைப்புகளையும் குறிவைப்பது ஏற்றுக் கொள்ள முடியாதது என்று குறிப்பிட்டுள்ளார். இந்தியா ஐக்கிய அரபு அமீரகத்துடன் என்றென்றும் ஒருங்கிணைந்து செயல்படும் என்றும், பேச்சுவார்த்தை மற்றும் ராஜதந்திரத்தின் மூலம் அனைத்து பிரச்சனைகளுக்கும் அமைதியான முறையில் தீர்வு காண்பதையே இந்தியா விரும்புவதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

நீடித்த அமைதி, ஸ்திரத்தன்மை மற்றும் உலகளாவிய எரிசக்தி பாதுகாப்பிற்கு ஹோர்முஸ் ஜலசந்தியில் பாதுகாப்பான மற்றும் தடையற்ற கப்பல் போக்குவரத்தை உறுதி செய்வது இன்றியமையாத தாக உள்ளது என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி தமது சமூக ஊடகப் பதிவில் வலியுறுத்தி உள்ளார்.

ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள ஃபுஜைரா பெட்ரோலியத் தொழிற்சாலை பகுதியில், ஈரான் நேற்று நடத்திய ஆளில்லா விமானத் தாக்குதலால் ஏற்பட்ட தீ விபத்தில், 3 இந்தியர்கள் காயமடைந்துள்ளனர். இது குறித்து, வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இந்த தாக்குதலை ஏற்றுக் கொள்ள முடியாது என்று கண்டனம் தெரிவித்துள்ளது. அப்பகுதியில் உடனடியாக போர் நிறுத்தம் மேற்கொள்வதோடு, பொதுமக்கள் மற்றும் உள்கட்டமைப்புகளை குறிவைத்து தாக்குவதை கைவிட வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளது.

சர்வதேச சட்டத்திற்கு இணங்க ஹோர்முஸ் ஜலசந்தி வழியாக தடையற்ற கப்பல் போக்குவரத்து மற்றும் வர்த்தக நடைமுறைகளை மேற்கொள்ள வழிமுறைகளை காண வேண்டும் என்றும், வெளியுறவு அமைச்சகத்தின் அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. மேலும், பிரச்சனைகளுக்கு அமைதியான முறையில் தீர்வு காணும் வகையில், மேற்கொள்ளப்படும் அனைத்து முயற்சிகளுக்கும் இந்தியா ஆதரவு அளிக்கும் என்றும், வெளியுறவுத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மேற்கு வங்க சட்டமன்றத் தேர்தலில் பிஜேபி அதிக இடங்களை கைப்பற்றி உள்ளதைத் தொடர்ந்து, அம்மாநில சட்டமன்றக் கட்சித் தலைவர் தேர்தலுக்கான மத்திய பார்வையாளராக பிஜேபியின் மூத்த தலைவரும், மத்திய உள்துறை அமைச்சருமான திரு. அமித் ஷா நியமிக்கப்பட்டுள்ளார். ஒடிஷா முதலமைச்சர் திரு. மோகன் சரன் மாஜி மத்திய இணைப் பார்வையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். அதேபோல், அஸ்ஸாம் சட்டமன்றக் கட்சித் தலைவர் தேர்தலுக்கான மத்திய பார்வையாளராக மத்திய அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா நியமிக்கப்பட்டுள்ளார். ஹரியானா முதலமைச்சர் திரு. நயாப் சிங் சைனி, மத்திய இணைப் பார்வையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான அறிவிப்பை பிஜேபி வெளியிடப்பட்டுள்ளது.

5 மாநில சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், மேற்கு வங்கத்தில், பாரதிய ஜனதா கட்ச அமோக வெற்றி பெற்று அங்கு முதல் முறையாக ஆட்சி அமைக்க உள்ளது. தமிழ்நாட்டில், முதல் முறையாக தேர்தலில் போட்டியிட்ட தமிழக வெற்றிக் கழகம், அதிக இடங்களில் வென்று மிகப் பெரிய கட்சியாக உருவெடுத்துள்ளது. அஸ்ஸாம் மாநில தேர்தலில் ஏற்கனவே ஆட்சியிலிருந்த பிஜேபி, மீண்டும் ஆட்சி அமைக்க உள்ளது. புதுச்சேரியில் என்.ஆர்.காங்கிரஸ் தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியின் ஆட்சியே மீண்டும் மலரவுள்ளது.

கேரளாவில், காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி, அதிக இடங்களை கைப்பற்றி, ஆட்சி அமைக்க தயாராக உள்ளது. இது குறித்த ஒரு செய்தித் தொகுப்பு...

(வாய்ஸ்)

(வாய்ஸ்)

மேற்கு வங்கத்தில் பிஜேபி 206 இடங்களில் வெற்றி பெற்று ஆட்சி அமைக்கத் தேவையான 3-ல் 2 பங்கிற்கும் அதிகமான பெரும்பான்மையை பெற்றுள்ளது. இதன் மூலம் திரிணாமுல் காங்கிரஸின் 15 ஆண்டுகால ஆட்சி முடிவுக்கு வந்துள்ளது. வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தத்திற்குப் பிறகு நடைபெற்ற இந்த முதல் தேர்தலில், மேற்கு வங்கத்தின் 293 சட்டமன்றத் தொகுதிகளில், 292 தொகுதிகளுக்கான முடிவுகள் அறிவிக்கப் பட்டுள்ளன. திரிணாமுல் காங்கிரஸ் 80 இடங்களிலும், காங்கிரஸ் 2 இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளன.

தமிழ்நாட்டில், முதல் முறையாக தேர்தலில் போட்டியிட்ட தமிழக வெற்றிக் கழகம், 108 இடங்களில் வென்று தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது. 234 உறுப்பினர்களைக் கொண்ட தமிழக சட்டமன்றத்தில், பெரும்பான்மைப் பெற அக்கட்சிக்கு இன்னும் 10 இடங்கள் தேவைப்படுகின்றன.

அஸ்ஸாமில் 126 உறுப்பினர்களைக் கொண்ட சட்டமன்றத்தில், ஆளும் பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி 82 இடங்களைப் பெற்று மீண்டும் ஆட்சியை பிடித்துள்ளது. கேரளாவில் காங்கிரஸ் 63 இடங்களையும், அதன் கூட்டணி கட்சியான இந்திய யூனியன் முஸ்லீம் லீக் 22 இடங்களையும் வென்று ஆட்சி அமைக்க உள்ளன.

புதுச்சேரியில் 30 உறுப்பினர்களைக் கொண்ட சட்டமன்றத்தில், 18 இடங்களைப் பெற்று தேசிய ஜனநாயக கூட்டணி மீண்டும் ஆட்சியை பிடித்துள்ளது. என்.ஆர்.காங்கிரஸ் 12 இடங்களையும், பிஜேபி 4 இடங்களையும் வென்றுள்ளன.

இந்தியாவிற்கும் – ஜமைக்காவிற்கும் இடையிலான நட்புறவில் வளர்ச்சிக்கான ஒத்துழைப்பு முக்கிய அம்சமாகத் திகழ்கிறது என்று, மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார். இன்று ஜமைக்காவில் அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் திருமதி. கமீனா ஜான்சன் ஸ்மித் மற்றும் அமைச்சரவை உறுப்பினர்களுடன் நடைபெற்ற சந்திப்புக்குப் பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய அவர், இரு தரப்பு உறவுகளின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கி, ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான புதிய வழிகளை கண்டறியும் வகையில் இந்தப் பேச்சுவார்த்தை அமைந்ததாகத் தெரிவித்தார்.

டிஜிட்டல் வளர்ச்சி, கலாச்சார பரிமாற்றம், விளையாட்டு மற்றும் டிஜிட்டல் பணப் பரிவர்த்தனை போன்ற துறைகளில், இரு நாடுகளும் முக்கிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளதாக டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

மேலும், கடந்த மார்ச் மாதம் ஜமைக்காவின் கிட்சன் நகரில் கிராமப்புற வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டம் வெற்றிகரமாக முடிக்கப்பட்டு, ஒப்படைக்கப்பட்டதையும் அவர் எடுத்துக் கூறினார்.

*ஜெய்சங்கர் - 2 (6)*

இந்தியா ஐ.நா மேம்பாட்டு கூட்டாண்மை நிதியத்தின் கீழ், இந்தியாவின் ஒரு மில்லியன் டாலர் நிதியுதவியுடன் இத்திட்டம் செயல்படுத்தப் பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, ஜமைக்காவின் கிட்சன் நகரில் உள்ள மேற்கிந்தியத் தீவுகளின் பல்கலைக் கழகத்தில், உலகின் மாறிவரும் போக்கு குறித்தும், அதற்கான இந்தியாவின் செயல்பாடுகள் குறித்தும் உரையாற்றினார்.

*வியட்நாம் அதிபர் -1 (16)*

வியட்நாம் அதிபர் திரு. டோ லாம், இன்று, பீஹாரின் புத்த கயாவில் உள்ள உலகப் புகழ்பெற்ற மஹாபோதி கோவிலில் வழிபாடு செய்தார். அங்குள்ள புனித போதி மரத்தின் கீழ் அமர்ந்து தியானம் செய்து புத்த பகவானை வழிபட்டார். அதனைத்தொடர்ந்து, வியட்நாம் அதிபர் அங்குள்ள வியட்நாமிய மடாலயத்திற்குச் சென்றார். அங்கு பல்வேறு மதம் மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகளில் பங்கேற்றார். இந்தியாவிற்கும் – வியட்நாமிற்கும் இடையிலான மதம் மற்றும் ஆன்மீக உறவுகளை வலுப்படுத்தும் வகையில் அவரது வருகை முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

முன்னதாக, 3 நாள் அரசுமுறைப் பயணமாக, இன்று காலை வியட்நாம் அதிபர் திரு. டோ லாம் இந்தியாவிற்கு வந்தார். பீஹாரில் உள்ள புத்த கயாவிற்கு வந்தடைந்த அவரை, விமான நிலையத்தில், பீஹார் முதலமைச்சர் திரு. சாம்ராட் சௌத்ரி வரவேற்றார்.

இந்தியா வந்துள்ள வியட்நாம் அதிபருக்கு நாளை குடியரசுத் தலைவர் மாளிகையின் முகப்பில் சம்பிரதாய வரவேற்பு அளிக்கப்பட உள்ளது. அதனைத் தொடர்ந்து, குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆகியோரையும் அவர் சந்தித்துப் பேசவுள்ளார்.

*வியட்நாம் அதிபர் - 2 (7)*

கடந்த மாதம் வியட்நாம் அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு திரு. டோ லாம் இந்தியாவிற்கு மேற்கொள்ளும் முதல் அரசுமுறைப் பயணம் இதுவாகும் என மத்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்தியாவும் – வியட்நாமும் வரலாற்று மற்றும் நாகரீக ரீதியிலான உறவுகளை கொண்டுள்ளன என்றும், வியட்நாம் அதிபரின் வருகை இருதரப்பு உறவுகளுக்கு புதிய உத்வேகத்தை அளிக்கும் என்று வெளியுறவு அமைச்சகத்தின் செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*புதுச்சேரி ஆட்சி -1 (4)*

புதுச்சேரியில் என்ஆர்காங்கிரஸ் தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, என்ஆர்காங்கிரஸ் கட்சியின் புதிய உறுப்பினர்களின் கூட்டம் நடைபெற்றது. இதில் புதிய அரசு அமைப்பதற்கான ஆலோசனைகள் குறித்து விவாதிக்கப்பட்டது. இது குறித்த ஒரு செய்தித் தொகுப்பு...

(வாய்ஸ்)

*புதுச்சேரி ஆட்சி - 2 (12)*

(வாய்ஸ்)

தேசிய ஜனநாயக கூட்டணியில் அங்கம் வகிக்கும் பிஜேபி-யின் ஆலோசனைக் கூட்டம் இன்று காலை அக்கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்குப் பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் மேலிடப் பொறுப்பாளர் திரு. நிர்மல் குமார் சுரானா, பாஜகவின் சட்டமன்றக் கட்சித் தலைவராக திரு. நமச்சிவாயம் தேர்வு செய்யப்பட்டுள்ளதாகவும், விரைவில், திரு. ரங்கசாமி தலைமையில் தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் பதவியேற்பு விழா நடைபெறும் என்றும் தெரிவித்தார். மேலும், அமைச்சர்களுக்கான இலாக்கா மற்றும் துறை ஒதுக்கீடுகள் தொடர்பான

ஆலோசனைகள் தற்போது தீவிரமாக நடைபெற்று வருவதாகவும் கூறினார். இந்தக் கூட்டத்தில், மத்திய அமைச்சரும், பிஜேபி தேர்தல் பொறுப்பாளருமான திரு. மன்சுக் மாண்டவியா, பங்கேற்றார்.

*தமிழக தேர்தல் (12)*

தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தலில் அதிக இடங்களை வென்றுள்ள தமிழக வெற்றிக் கழகம் ஆட்சி அமைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. இன்று சென்னையை அடுத்த பனையூரில் தவெக தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற அக்கட்சியின் புதிய சட்டப்பேரவை உறுப்பினர்களின் கூட்டத்தில், திரு. விஜய் அக்கட்சியின் சட்டப்பேரவைக் குழுத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து புதிய அரசு அமைக்க ஆளுநரிடம் அவர் உரிமைக் கோருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையே, திமுக தலைவர் திரு.மு.க. ஸ்டாலின் தமது முதலமைச்சர் பதவியை இன்று ராஜினாமா செய்தார். அவரது ராஜினாமா கடிதத்தை ஏற்றுக் கொண்ட ஆளுநர் திரு. R.V. அர்லேக்கர், புதிய அரசு அமையும் வரை, பதவியில் தொடருமாறு கேட்டுக் கொண்டதாக, மக்கள் மாளிகையின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரிய வகை நோய்களுக்கான சிகிச்சையில், சம்மந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரின் ஒருங்கிணைந்த தொடர்ச்சியான முயற்சிகள் அவசியம் தேவைப்படுவதாக, மத்திய சுகாதாரத்துறைச் செயலர் திருமதி. புண்ய சலிலா ஸ்ரீவஸ்தவா தெரிவித்துள்ளார்.

புதுடெல்லியில் இன்று நடைபெற்ற அரிய வகை நோய்களுக்கான 2 நாள் மாநாட்டை தொடக்கி வைத்துப் பேசிய அவர், இந்நோயால் பாதிக்கப்பட்டவர்கள் எதிர்கொள்ளும் சாவல்களை புரிந்து கொள்வது, புதிய முயற்சிகளை ஊக்குவிப்பது மற்றும் நாடு முழுவதும் அரிய வகை நோய்களுக்கான மேலாண்மையை வலுப்படுத்துவதற்கான புதிய வழிமுறைகளை உருவாக்குவது ஆகியவையே இந்த மாநாட்டின் முக்கிய நோக்கம் என்று தெரிவித்தார்.

அரிய வகை நோய்களை கையாள்வதன் அவசியம் குறித்து, 2017ஆம் ஆண்டின் தேசிய சுகாதார கொள்கையில் முதன் முதலாக வலியுறுத்தப் பட்டதாகவும் தெரிவித்த திருமதி. ஸ்ரீவத்ஸவா நாடு முழுவதும் இதற்கான 15 சிறப்பு மருத்துவ மையங்கள் செயல்பட்டு வருவதாகவும், அரிய வகை நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் எளிதாக சிகிச்சைப் பெறும் வகையில், அவர்களுக்கு வழங்கப்படும் நிதியுதவி, 50 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டு இருப்பதாகவும் கூறினார்.

*வானிலை (5)*

தமிழ்நாடு மற்றும் உள் கர்நாடகா பகுதிகளில் நிலவும் வளிமண்டல காற்றழுத்த தாழ்வுப் பாதை காரணமாக, அடுத்த 4 நாட்களுக்கு தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்காலிலும், இடி-மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

*கிரிக்கெட் (3)*

ஐபிஎல் 20-20 கிரிக்கெட் போட்டித் தொடரில், புதுடெல்லியில் இன்றிரவு 7.30 மணிக்குத் தொடங்கும் ஆட்டத்தில், சென்னை சூப்பர் கிங்ஸ் அணியும், டெல்லி கேபிடல்ஸ் அணியும் எதிர் கொள்கின்றன.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

ஐக்கிய அரபு அமீரகத்தில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் 3 இந்தியர்கள் படுகாயம் அடைந்தது குறித்து பிரதமர் திரு. நரேந்திர மோடி, கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

5 மாநில சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற கட்சிகள் புதிய ஆட்சிய அமைப்பதற்கான நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன.

இந்தியாவிற்கும் – ஜமைக்காவிற்கும் இடையிலான நட்புறவில் வளர்ச்சிக்கான ஒத்துழைப்பு முக்கிய அம்சமாகத் திகழ்கிறது என்று, மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இந்தியா வந்துள்ள வியட்நாம் அதிபர் திரு. டோ லாம், புத்த கயாவில் உலகப் புகழ்பெற்ற மஹாபோதி கோவிலில் வழிபாடு செய்தார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. BI / MS / RK